விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 057 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 02 வெள்ளிக்கிழமை (14.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## தையிட்டி விகாரை

# தேசிய ஐக்கியத்துடன் தொடர்புடைய விடயம்

## புத்தசாசன அமைச்சு தெரிவிப்பு

*(கொழும்பு)* யாழ்.தையிட்டி விகாரை தேசிய ஐக்கியத்துடன் தொடர்புடைய உணர்வுபூர்வமான விடயமாகும். இது தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகப் புத்த சாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*



## கனேடிய உயர்ஸ்தானிகர் இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற் 15

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்ற உலக அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்ற ஜனாதி 15

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு தொடர்பில் எழுந்த பிரச்சினையை அடுத்து தாக்கல் செய் 15

## மகிந்தவின் இல்லத்தில் நீர் விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்புப் படையினர் தங்கியிருக்கும் பகுதியில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மூன்று இலட்சம் ரூபாய் நிலுவைத் தொகையைச் செலுத்தாத காரணத்தினால் இவ்வாறு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த 15

### ஊடகவியலாளர் லசந்த படுகொலையுடன் தொடர்புடைய

## 3 பேரின் விடுதலைக்கான பரிந்துரையை தற்காலிகமாக இரத்துச் செய்த சட்டமா அதிபர்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களை விடுவிக்குமாறு கோரி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்வைத்த பரிந்துரையை தற்காலிகமாக இரத்துச் செய்வதாக சட்டமா அதிபர் கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்துக்கு கடிதம் மூலம் நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

லசந்த விக்ரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்டமை மற்றும் அவரது குறிப்பேடு காணாமல் போனமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கடந்த ஜனவரி மாதம் 15

## யாழ்ப்பாண கம்பன் விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக் கம்பன் விழா இன்று 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 15, 16 ஆகிய மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

விழாவின் காலை நிகழ்வுகள் நல்லூர் ஆதீன மண்டபத்திலும் மாலை நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும் இடம்பெறும்.

மூன்று தினங்கள் நடைபெறும் கம்பன் விழாவில் இலக்கிய ஆணைக்குழு, விவாத அரங்கு, தனியுரை, பட்டிமண்டபம், சிந்தனை அரங்கம், நாடக அரங்கம், வழக்காடு 15

## யாழ் – சென்னை விமான சேவையை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

சென்னையிலிருந்து யாழ்ப்பாணம்பலாலி வரை முன்னெடுக் 15

## 2025 வரவு செலவுத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான இறுதிக் கட்டத்தின் பூர்வாங்கக் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை 15



## குரங்குகளை பிடிக்கும் திட்டம் ஆரம்பம்

(கண்டி)

தற்போது குரங்குகளைப் பிடிக்கும் வேலைத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக வேளாண்மை, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் 15

நடுவு நிலை தவறாது காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

### 01.03.2025 தொடக்கம் 31.12.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு புலோப்பளை ஆட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் 2025

ஏலக்கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 14.02.2025 - 27.02.2025 பி.ப 2.00 மணி வரை
ஏலக்கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 27.02.2025 பிற்பகல் 2.00 மணி
ஏலக்கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 27.02.2025 பிற்பகல் 2.00 மணி
ஏலக்கேள்வி நடைபெறும் இடம் :- தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | 44,665.40 | 5,000.00 |

**நிபந்தனைகள்**


01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமைஅலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினை 27.02.2025 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும்.
03. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணத்தை உடனடியாக செலுத்த தவறும்பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.
04. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை மாதாந்தம் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
05. சித்திகர ஏலதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
06. ஏலக்கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
07. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை**

(C-2258)

14.02.2025

## இந்திய உயர்ஸ்தானிகர் ரில்வின் சில்வாவுடன் சந்திப்பு



இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜா மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனவின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுடன் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் இந்தியா-இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்த விரிவான கலந்துரையாடல் மற்றும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் - மைத்திரி திடீர் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று(13) பிற்பகல் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள தனியார் ஹோட்டலில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மேலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, மஹிந்த அமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, உதய கம்மன்பில, நிமல் லன்சா, ராஜித சேனாரத்ன, ருவன் விஜேவர்தன, சாகல ரத்நாயக்க மற்றும் மேலும் பலர் இணைந்து கொண்டுள்ளனர்.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில், நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## RAVEENS EMC KARAVEDDY
### Grade 06 - ADMISSION EXAM - 2025
### ENGLISH MEDIUM

| NO | Name of the Student | Admission Exam - Gr 06 | | | | | School |
|---|---|---|---|---|---|---|---|
| | | Maths | English | Total | Rank | Scholar ship Marks | |
| 1 | V.Ashwin | 81 | 91 | 172 | 1 | 165 | J/ Karanavai Vetharaniyeswara vidyalaya |
| 2 | S.Aarush | 83 | 66 | 149 | 2 | 155 | J/ Manikkavasagar Vidyalaya |
| 3 | M.Akshayan | 73 | 74 | 147 | 3 | 162 | J/ Vada Hindu Primary School |
| 4 | S.Aniruth | 68 | 76 | 144 | 4 | 170 | J/ Vada Hindu Primary School |
| 5 | J.Sarvin | 76 | 67 | 143 | 5 | 164 | J/Melaipuloly Sivapiragasha Vidjalayam |
| 6 | G.Diluxshi | 59 | 84 | 143 | 5 | 149 | J/Thunnalai Kasinathar Vidiyalayam |
| 7 | A.Gurubaran | 66 | 75 | 141 | 7 | 158 | J/ Nelliady M.M.T.M School |
| 8 | K.Achayan | 71 | 67 | 138 | 8 | 152 | J/ Thunnalai Kasinathar Vidyalaya |
| 9 | S.Kaveeshan | 61 | 76 | 137 | 9 | 164 | J/ Nelliady M.M.T.M School |
| 10 | S.Aadesh | 67 | 69 | 136 | 10 | 171 | J/ Manikkavasagar Vidyalaya |
| 11 | G.Venuja | 60 | 67 | 127 | 11 | 162 | J/Melaipuloly Sivapiragasha Vidjalayam |
| 12 | S.Varmishasree | 59 | 67 | 126 | 12 | 163 | J/ Nelliady M.M.T.M School |
| 13 | K.Abinesh | 56 | 63 | 119 | 13 | 155 | J/ Manikkavasagar Vidyalaya |
| 14 | G. Vipushana | 54 | 46 | 100 | 14 | 146 | J/ Manikkavasagar Vidyalaya |
| 15 | T.Theeshithan | 51 | 33 | 84 | 15 | 155 | J/ Manikkavasagar Vidyalaya |

**The above students are selected for the admission for grade 6 - 2025**

**P.Easwaranathan**
**Director, Raveens E.M.C**
**Karaveddy**

(C-2257)

## ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நிச்சயம் நீதி நிலை நாட்டப்படும்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இந்த விடயத்தில் நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவுபெறவில்லை. அவை நடைபெற்று வருகின்றன.

விசாரணையில் தெரியவரும் விடயங்களுக்கு அமைய தொடர்புடையவர்களுக்கு வழக்குத் தொடரப்படும். குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு நீதி அமைச்சருக்குக் கிடையாது.


குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும், வழக்குத் தொடுக்கும் விடயத்தில் அரசு உறுதியாகவுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்து ஜனாதிபதியும் பேச்சு நடத்தி வருகின்றார். எனவே, நிச்சயம் நீதி நிலை நாட்டப்படும். இந்த விடயத்தில் எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்றார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியர்
திரு. அ.வினோராஜ் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் அந்தோனி அற்புதம்



தோற்றம் : 29.01.1949 மறைவு : 12.02.2025

அவர்களின் பிரிவால் துயருற்றுத் தவிக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஆசிரியர் [illegible]ரிக் கழகம்
யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை

(C-2261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அரிசிக்கு தட்டுப்பாடு

# ஏற்படும் அபாயம்!

## தேசிய விவசாயிகள் ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் பாரிய அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அச்சுறுத்தல் நிலை காணப்படுவதாக தேசிய விவசாயிகள் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்தின் காரணமாகவும் உரம் உரிய காலப்பகுதியில் கிடைக்கப்பெறாமை காரணமாகவும் விவசாயத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் பெரும்போக அறுவடை இன்னும் சில தினங்களில் நிறைவடையவுள்ள நிலையில் இம்முறை பெரும்போகத்தில் 24-25 இலட்சம் மெற்றிக்தொன் நெல்லையே பெற்றுக்கொள் எக்கூடிய நிலை காணப்படுகின்றது.

ஆனால் கடந்த காலங்களில் 25-30 இலட்சம் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் எடுத்து நோக்கும்போது இவ்வருடமே வரலாற்றில் முதற் தடவையாக மிகக் குறைந்த எவு பெரும்போக நெல் அறுவடையாக பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக ஒக்டோபர் மாதமாகும் போது பாரிய அரிசித் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# காதலர் தினத்தன்று

## அவதானத்துடன் செயற்படுங்கள்

### இளைஞர், யுவதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

காதலர் தினம் என்ற போர்வையில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்கள் குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலகம் முழுவதும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி காதலர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்தத் தினத்தை வர்த்தகர்களும் போதைப் பொருள் கடத்தல்காரர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

காதலர் தினத்தன்று இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுதல், சமூக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், மோசடிகளில் ஈடுபடுதல், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

காதலர் தினத்தன்று இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களிலிருந்து இளைஞர்களும் யுவதிகளும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கவும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)

# புற்றுநோயால் வருடாந்தம்

## 250 சிறார்கள் உயிரிழப்பு


(கொழும்பு)

வருடாந்தம் 1200 சிறுவர்கள் புற்றுநோயுடன் அடையாளம் காணப்படுவதாகச் சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் நிணநீர்ச்சுரப்பி புற்றுநோய், எலும்பு மற்றும் மூளை புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்புத் திட்டத்தின் சமூக விசேட வைத்திய நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்தார்.

இவர்களில் வருடாந்தம் சுமார் 250 சிறார்கள் உயிரிழப்பதாக அவர் சுட்டிக் காட்டினார். (நி-8)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 20-03-1928

ஆண்டவன் அடியில் 16-01-2025

அமரர். வள்ளியம்மாள் இரத்தினவடிவேல்

தெய்வத்தின் திருவுருவே!
அன்பின் பிறப்பிடமே!
பொறுமையின் சிகரமே!
ஆலமரமாய் 97 வருடங்கள்
சிவசிந்தனையுடன் வாழ்ந்து
எம்மைப் பாசத்துடன் வளர்த்து
சிவனின் திருவடிக்கே சென்ற உத்தமியே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி 15.02.2025 நாளை சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், முகநூல், மின்னஞ்சல், பிரசுரம் மற்றும் மலர்வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கு மனமாரந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-2256)

வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

தகவல் குடும்பத்தினர்



33ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 18 06 1920

மறைவு 17 02 1992

அமரர். இராசையா செல்வராசா (இளைப்பாறிய ஆசிரியர்)

திதி : துதியை (14.02.2025)

காலங்கள் கடந்தாலும் உங்களுடன் வாழ்நத காலங்கள் என்றும் பசுமையானது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"சுபசதனம்" சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர் மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (பேராசிரியர் மா. சின்னத்தம்பி)

(840)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## புதிய கப்டனாக ரஜத் படிதார் நியமனம்

### ஆர்சிபி அணி அறிவிப்பு




ஐ.பி.எல் 2025 ஆம் ஆண்டுக்கான ஆர்சிபி அணியின் புதிய கப்டன். ரஜத் படிதாரினை ஆர்சிபி நிர்வாகம் அறிவித்துள்ளது.ரஜத் படிதார் அல்லது கோலி கப்டனாக நியமிக்கப்படலாம் எனக் கூறப்பட்டு வந்தன. இந்த நிலையில், புதிய கப்டனாக ரஜத் படிதாரை ஆர்சிபி நிர்வாகம் அறிவித்துள்ளது.


இந்த ஆண்டு ஐபிஎல் அணியில் உள்ள ஆர்சிபி வீரர்கள்: விராட் கோலி, ரஜத் படிதார் (கப்டன்), யஷ் தயாள், லியாம் லிவிங்ஸ்டன், பில் சால்ட், ஜிதேஷ் சர்மா, ஜோஷ் ஹேசில் வுட், ரசிக் சலாம் தார், சுயாஷ் சர்மா, க்ருணல் பாண்டியா, புவனேஷ்வர் குமார், ஸ்வப்னில் சிங், டிம் டேவிட், ரொமாரியோ ஷெப்பர்ட், நுவான் துஷாரா, மனோஜ் பண்டேஜ், எல்.ஸ்வஸ்திக் சிக்கரா, அபிநந்தன் சிங், மோஹித் ரதி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

கடந்த முறை ஃபாப் டு பிளெஸ்ஸி கப்டனாக செயற்பட்டார். அதற்கு முன்னதாக விராட்கோலி ஆர்சிபி அணியை வழிநடத்தி வந்தார். இந்நிலையில் பயிற்சியாளராகத் தினேஷ் கார்த்திக் தேர்வாகியுள்ளார். (6-8)

## ரிஸ்வான், சல்மான் அதிரடி சேஸிங்கில் பாகிஸ்தான் சாதனை

அணித் தலைவர் மொஹமட் ரிஸ்வான் மற்றும் சல்மான் ஆகா ஆகியோரின் சதங்களுடன் 353 என்ற வெற்றி இலக்கினைப் பாகிஸ்தான் 6 விக்கெட் கைவசம் இருந்த நிலையில் துரத்தி வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இன்று நடைபெறும் முத்தரப்புத் தொடரின் இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றது.




கராச்சியில் நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவுடனான மோதலில் 353 ஓட்டங்களைச் சேஸிங் செய்த போது பாகிஸ்தான் 91 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது.

பின்னர் நான்காவது விக்கெட்டுக்காக ரிஸ்வான் மற்றும் சல்மான் ஆகா இருவரும் ஜோடி சேர்ந்து 260 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று சாதனை படைத்தனர்.


இந்த இன்னிங்ஸில் பாகிஸ்தான் தலைவர் தனது நான்காவது ஒரு நாள் சதத்தை அடித்தார். அதே நேரத்தில் சல்மான் ஆகா தனது முதல் சதத்தை சர்வதேச ஒருநாள் வடிவில் எடுத்து ஆட்டமிழக்காது முறையே 122 மற்றும் 134 ஓட்டங்களை எடுத்தனர்.

இதன் மூலம், ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தானுக்காக அதிக நான்காவது விக்கெட் இணைப்பாட்டத்தை அமைத்தனர்.

2022 இல் லாகூரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 349 ஓட்டங்களைத் துரத்தியது. ஒரு நாள் போட்டிகளில் பாகிஸ்தானின் அதிகபட்ச வெற்றிகரமான சேஸிங்காக முன்னர் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)

## ஆஸி.வீரர் மேத்யூ குஹ்னேமன் பந்து வீச தடை விதிக்கப்படுமா?

இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட் மற்றும் 2 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது. இந்தச் சுற்றுப்பயணத்தில் 2 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்ற அவுஸ் திரேலிய அணி ஒருநாள் தொடரின் முதல் தோல்வியைத் தழுவியது.



இந் நிலையில் அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை வெல்லுவதற்கு முக்கிய காரணமாக இருந்த மேத்யூ குஹ்னேமன் பந்துவீச்சில் சந்தேகம் இருப்பதாக புகாரளிக்கப்பட்டுள்ளது.

இடதுகை சுழற்பந்து வீச்சாளரான மேத்யூ குஹ்னேமன் இந்தத் தொடரில் மொத்தமாக 16 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். அவர்மீது புகாரளிக்கப்பட்டுள்ளதால் அவரது பந்து வீச்சை சோதனைக்கு உட்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு அறிமுகமான மேத்யூ குஹ்னேமன் இதுவரை 124 போட்டிகளில் விளையாடியுள்ளார். 5 டெஸ்ட், 4 ஒருநாள் மற்றும் பிக்பாஸ் தொடரில் 55 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

கிரிக்கெட் விதிகளின் படி, மேத்யூ குஹ்னேமன் பந்து வீசும் போது அவரது கை 15 டிகிரி அதிகமாக சுழல்வது சட்டத்திற்கு புறம்பாகப் பார்க்கப்படுகிறது.

பிரிஸ்பேனில் உள்ள சோதனை மையத்தில் மேத்யூ குஹ்னேமன் பந்துவீச்சு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் ஐ.சி.சிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஒருவேளை அவரது பந்து வீச்சில் சந்தேகம் ஏற்பட்டால், அவரது பந்துவீச்சில் மறுமதிப்பீடு செய்யும் வரை அவர் கிரிக்கெட்டில் இருந்து இடைநீக்கம் செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

## இந்தியா அபார வெற்றி தொடரை இழந்தது இங்கிலாந்து

இந்திய அணி 142 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.



இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய இந்தியா 356 ரன்கள் குவித்தது. ரோகித் சர்மா 1 ரன்னில் ஆட்டமிழந்தாலும் சுப்மன் கில் 112 ரன்கள், விராட் கோலி 52 ரன்கள், ஷ்ரேயாஸ் அய்யர் 78 ரன்கள், கே.எல். ராகுல் 40 ரன்களும் அடித்தனர். இங்கிலாந்து அணி தரப்பில் அடில் ரஷித் 10 ஓவர்கள் வீசி 64 ரன்கள் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

பின்னர் 357 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இங்கிலாந்து அணி களம் இறங்கிய பில் சால்ட், பென் டக்கெட் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் தொடக்கத்தில் அதிரடியாக விளையாடினர்.

இதனால் ஜெட் வேகத்தில் ரன் உயர்ந்தது. 5.2 ஓவரில் 50 ரன்னைத் தொட்டது. இந்த ஜோடியை அர்ஷ்தீப் சிங் பிரித்தார். 7 ஆவது ஓவரின் 2ஆவது பந்தில் டக்கெட் 22 பந்தில் 34 ரன்கள் எடுத்த நிலையில் ரோகித் சர்மாவிடம் கட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது இங்கிலாந்தின் ஸ்கோர் 6.2 ஓவரில் 60 ரன்னாக இருந்தது.

அடுத்து ஜோ ரூட் களம் இறங்கினார். மறுமுனையில் விளையாடிய பில் சால்ட் 21 பந்தில் 23 ரன்கள் எடுத்து வெளியேறினார். இவரது விக்கெட்டையும் அர்ஷ்தீப் சிங் வீழ்த்தினார். பின்னர் இங்கிலாந்து வீரர்களால் நிலைத்து நின்று விளையாட முடியவில்லை. இறுதியாக இங்கிலாந்து 34.2 ஓவரில் 214 எடுத்து ஆல் அவுட் ஆனது.

இதனால் இந்தியா 142 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று இங்கிலாந்தை ஒயிட் வாஷ் செய்தது. இந்திய அணி சார்பில் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா, ஹர்திக் பாண்ட்யா, அக்சார் படேல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டத்திற்கு எதிராக செயற்பட்டால் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்

## அர்ச்சுனா எம்.பி குறித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நபர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கு எதிராக சட்டம் நடைமுறைபடுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கைது செய்யப்படமாட்டாரா? அல்லது பொலிஸ் அதற்கு அஞ்சுகிறதா? எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.


"பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதால் அவருக்கு எந்த சிறப்பு சலுகைகளையோ அல்லது சட்டத்திலிருந்து விலக்குகளையோ வழங்கப்படாது. அவர் மிக உயர்ந்த நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவர்.

அவரது நடத்தைகள் மிகவும் மரியாதைக்குரியதாக இருக்க வேண்டும். அதைத் தான் பொதுமக்களும் எதிர்பார்க்கிறார்கள். எனவே அவர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அவர் தீர்மானிக்க வேண்டும்.



எனினும் அவர் சட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டால், நாங்கள் சட்டத்தை நடை முறைப் படுத்து வோம். குறித்த சம்பவம் தொடர்பில் எதிர்வரும் காலத்தில் பொலிஸ் சட்டநடவடிக்கை எடுக்கும்" எனத் தெரிவித்தார். (நி-8)

# இந்த ஆண்டில் இதுவரை 5591 டெங்கு நோயாளர்கள்



(கொழும்பு)

நாட்டின் 17 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பெரும்பாலானவர்கள் கொழும்பு, கம்பஹா, கண்டி, மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5591 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் நாட்டின் 74 வைத்தியசாலைகளில் 342 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-8)


# ஏப்ரல் வரை அதிகரிக்கவுள்ள வெப்பம்

(கொழும்பு)

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

திணைக்களத்தினால் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது அதிகாலை வேளையில் நிலவும் குளிரான காலநிலையும் தொடரக்கூடுமென அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.



நாட்டின் சில பகுதிகளில் இடைக்கிடையே சிறியளவில் மழை வீழ்ச்சி பதிவாகினாலும் வெப்பமான காலநிலை தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

மழை பெய்வதற்கு ஏற்ற அளவிலான திறன் கொண்ட மேகங்களின் உருவாக்கம் குறைவாகக் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


# ஐக்கிய தேசியக் கட்சி-ஐக்கிய மக்கள் சக்தி பேச்சுவார்த்தை இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உள்ளிட்ட தேர்தலை இலக்காகக் கொண்டு ஒன்றிணைந்து செயற்படுவதற்காகக் குறித்த இரு கட்சிகளுக்கும் இடையே பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடைபெற்று வந்தன.

இந்தக் கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக இரு கட்சிகளினதும் சார்பில் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன.



எவ்வாறாயினும் பேச்சுவார்த்தைக்காக நியமிக்கப்படாத தரப்பினரும் கலந்துரையாடல்களில் பங்கேற்று உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளிப்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாகக் கலந்துரையாடல்களுக்காக நியமிக்கப்படாத தரப்பினர், கலந்துரையாடல்களில் பங்கேற்று சின்னம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தகவல்களை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டார். (நி-8)

# இராசிபலன்

14.02.2025
மாசி 02, வெள்ளிக்கிழமை
துதியை முன்னிரவு 10.11 மணிவரை
பூரம் முன்னிரவு 11.32 மணிவரை

சுபநேரம் -6.33-8.03 மணிவரை
இராகுகாலம்- 11.03-12.33 மணிவரை

சந்திராஷ்டமம்- திருவோணம், அவிட்டம்

**வளவன்**

**மேஷம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**கடகம்:** தொலை தூரத்திலிந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**ரிஷபம்:** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் உயரும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்

**சிம்மம்:** மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், திடீர் பயணங்கள் உருவாகும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** சகோதர வழியில் அனுகூலமுண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும்நாள்.

**கன்னி:** சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபாடு செய்ய வேண்டிய நாள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம் பெறலாம்.

**தனுசு:** மருத்துவ செலவுகள் குறைந்து மனத் திருப்தி கிடைக்கும், தொழிலில் எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் ஆனந்தம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.

**மீனம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்

**தன்னைத் தானே வெல்பவன் உண்மையான வீரன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்-அம்பாறை புதிய பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்து சபையின் அம்பாறைக்கான புதிய சேவை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

அதன்படி காங்கேசன்துறையிலிருந்து இரவு 10 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை வந்தடையும் குறித்த பேருந்தானது அங்கிருந்து இரவு 11.45 மணிக்கு அம்பாறை நோக்கிப் பயணமாகும் என இ.போ.ச (வட) சாலை முகாமையாளர் ந.குணசீலன் அறிவித்துள்ளார். (நி-6-8)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

(படங்கள்:-சிவசாந்தன்)

## கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நான்கு போத்தல் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-30)

## கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகப் பகுதியில் வாழ்ந்துவரும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான உதவியை வழங்குவதற்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவர்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் பண்பாட்டு அபிவிருத்தி செயல்திட்டத்தின் ஊடாக ஊக்குவிப்பு நிதி வழங்கும் நடவடிக்கையினை கலாசாரப் பேரவை மேற்கொண்டுள்ளது.

இத் திட்டத்திற்கு தரமதிப் பீட்டுக்குழுவின் தீர்மானத்திற்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்குத் தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (6-8)

## எரிக்வோல்ஸ் இன்று யாழிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக்வோல்ஸ் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

ஆளுநரின் சந்திப்பைத் தொடர்ந்து யாழ். நகரின் மத்தியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் இடம்பெறும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## ஐஸ் போதையுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

ராகம பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பத்கம்முல்ல பிரதேசத்தில் ஐஸ்போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ 56 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

## 'கற்பகம்' விற்பனை நிலையம் திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம்-ஆரிய குளம் பகுதியில் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களமும் - பனை அபிவிருத்திச்சபையும் இணைந்து "கற்பகம்" பனை சார் மற்றும் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை நிலையத்தை நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்திருந்தனர்.

பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தோட்டப் பிரதிஅமைச்சர் சு.பிரதீப் கலந்து கொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்திருந்தார்.

அத்துடன் பனை மரமும் விற்பனை நிலைய முன்றலில் நாட்டி வைக்கப்பட்டது.

மேலும் பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

## சாதனையாளர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினரால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமாகாண கல்வி வலயங்களில் முதன்மை பெற்ற சாதனையாளர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.133 செம்மணி வீதி நல்லூரில் அமைந்துள்ள வெளிக்கள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தாவரவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.செல்வி நாமகள் கிருஸ்ணபிள்ளை தலைமையில் இடம்பெற வுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் பு.ரவிராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

## முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தினால் முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலானது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 9 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு, முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் தொடர்புடைய திணைக்களங்களையும்அழைத்து சீரான கால இடைவெளிகளில் கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பா[illegible] செயலகத்தின் தலை[illegible] றொஹான் பெர்னான்டோ, பிரதிப் பணிப்பாளர் திருமதி சன்துனி ஆரியவன்ச, உதவிப் பணிப்பாளர் சுசந்த குமார, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், வர்த்தக முகாமைத்துவ குழுவின் தலைவர், வர்த்தக கைத்தொழிலாளர் சங்கத்தின் தலைவர், முதலீட்டாளர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் [illegible] கலந்து [illegible] (6-8-33)

## 'ஒரு யாழ்ப்பாணத்து வீடு' திரைப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திரைப்படக் கழகத்தின் ஏற்பாட்டில் நோர்வேயில் தயாரிக்கப்பட்ட 'ஒரு யாழ்ப் பாணத்து வீடு' எனும் திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இலவசக் காட்சியாகத் திரையிடப் படவுள்ளது.



வெளிநாட்டு மோகம்; வளமான வாழ்வுக்காக ஏற்கெனவே ஒப்புக் கொண்ட உறவுளை நிராகரித்தல்; குடும்பத்தின் எதிர்கால நிலைமைக்காகப் பலியாக்கப்படும் - ஆண்/பெண் உறவுகளின் உடைவில் நொருங்கிப்போகும் - மனிதர்கள்பற்றிய நமது கதைதான் இத்திரைப் படம். இத்திரைப்படத்தினை சிவசாமி பிரேமராஜ் நெறியாள்கை செய்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனங்களில் மொழிபெயர்ப்பாளர் குழு

## தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)


இலங்கையிலுள்ள அரச நிறுவனங்களில் விசேட மொழிபெயர்ப்பாளர் குழுவை உருவாக்க தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சு தீர்மானித் துள்ளது.

அரச நிறுவனங்களில் சேவைகளை பெற்றுக்கொள்ள வருகை தரும் மக்கள் எதிர் நோக்கும் சிரமங்களை கருத் திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதி அமைச்சர் முனீர் முலாபர் தெரி வித்தார்.

அதனடிப்படையில் அரச சேவையில் பல்வேறு மொழித் திறன் கொண்ட தொழில் வல்லுநர்கள் உள்வாங்கப்பட வுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். (நி-8)

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல்

# சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றில் விசேட அமர்வு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலம் தொடர்பான அறி விப்பை வெளியிடுவதற்காக இன்று விசேட பாராளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளதாக பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் இறுதி தீர்மானங்களை இன்று சபா நாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவுள்ளதாக அவர் தெரி வித்துள்ளார்.

இன்று காலை 9.30இற்கு பாராளுமன்றத்தின் விசேட கூட்டத்தைக் கூட்டுவதற்கு பாரா ளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியின் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி கூடிய பாராளு மன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டிருந்தது. (நி-8)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகம்

உரிமையாளர் பெயர்: இரத்தினராசா சிவராசாவும் பெண் விமலாதேவி
விண்ணப்பதாரர் பெயர்: திரு. இரத்தினராசா சிவராசா
முகவரி: நீதிமன்ற வீதி, மல்லாகம்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, நீதிமன்ற வீதியில் ஆதன இல. 33/3 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை "வெள்ளையர் வளவு" என்ற ஆதனம் Miss.N. இளையதம்பி என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு க.வ.கணேசன் ச.நீ முகதாவில் 03.02.2014ஆம் திகதியில் 2997ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரரினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த 2997 ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு க.வ.கணேசன் ச.நீ முகதாவில் 25.10.2010 ஆம் திகதியில் 1958 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விண்ணப்பதாரருக்கு இவ் ஆதனத்தை விற்பனை செய்த வைத்தீஸ்வரன் ஜெகதீஸ்வரன் என்பவரால் வந்தடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 1958 ஆம் இலக்க உறுதியில் வைத்தீஸ்வரன் ஜெகதீஸ்வரன் என்பவரால் தனது காலஞ்சென்ற பிதா அச்சலிங்கம் வைத்தீஸ்வரனுடனும் அவரது மாதா மங்கையர்க்கரசியுடனும் சகோதர சகோதரிகளுடனும் பின்னர் எனது மனைவி பிள்ளைகளுடனும் அண்ணளவாக கடந்த நாற்பதாண்டுகளாக தங்கு தடையற்ற தொடர்ச்சியாக வாழ்ந்து வந்துள்ளதாகவும் தமது பிதா மாதாவினரின் இறப்பு தமது திருமணம் தனது பிள்ளைகளின் பிறப்பு முதலான தனது குடும்ப நிகழ்வுகளனைத்தும் இவ்வாதனத்திலேயே இடம் பெற்றுள்ளன எனவும் மின்சார இணைப்புக்கான அனுமதி மற்றும் பிற பணிசார் பதிவுகளனைத்தும் தமது பெயரிலேயே உள்ளன எனவும் மேலும் தாம் இவ்வாத னத்தில் ஆட்சி செய்து வருகையில் நாட்டின் இப்பகுதியில் குழப்பங்களின் நிமித்தம் ஏற்பட்ட பாரிய மக்கள் இடம் பெயர்வின் போது இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளில் காலத்துக்காலம் தரித்து வாழ்ந்து வந்தேன். நாட்டின் சுமூக நிலைமை மீண்டவுடன் இவ்வாதனத்துக்குக் குடும்பத்துடன் திரும்பி வந்து பார்த்த பொழுது இதிற் காணப்பட்ட வீடு பயன்தரு மரங்களனைத்தும் அழிக்கப்பட்டுக் காணப்பட்டுள்ளமையினால் இவ்வாதனத்தில் தற்காலிகமாக வதிவிடமைத்து வசித்து வருவதாக குறிப்பிட்டு குறித்த வெளிப்படுத்தல் உறுதியினை முடித்துள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, வலிகாமம் வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவு, வலிவடக்கு மல்லாகம் பிரதேச சபைப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவு இல. ஜே/213, மல்லாகம் இறை "வெள்ளையர் வளவு" நில.பர.12உம் கிணறும். இதில் நிலப்பரப்பு 2 இரண்டும் செய்பயிர் வான் பயிர்களும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி. விக்னேஸ்வரன் அளந்து தயாரித்த 10.11.2010ஆம் திகதிய 5536ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 4 எனச் சுட்டப்பட்டுள்ளது.

**இதற்கு எல்லைகள்**

கிழக்கு - குறித்த படத்தில் துண்டு 5 எனச் சுட்டப்பட்ட வழிப்பாதையும், பரமநாதன் பெண் தங்கரத்தினத்துக்குரிய ஆதனமும்
வடக்கு - குறித்த படத்தில் துண்டு 3
மேற்கு - குறித்த படத்தில் துண்டு 3
தெற்கு - கனகரத்தினத்துக்கும் பெண் கமலாதேவிக்குரிய ஆதனம் இதனடங்கலும் கிணற்றில் 1/2 அரைவாசிப் பங்கும்.

மேற்குறித்த ஆதனத்தை சிவராசா பெண் விமலாதேவி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் சிவராசா பெண் விமலாதேவி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (3409)

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி).**


அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்

**கம்பன் விழா-2025**

(யாழ்ப்பாணம்)



**மாலை நிகழ்ச்சிகள்**

திகதி :14.02.2025 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம் :நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

**திருநாள் மங்கலம்**

மங்கல இசை: திரு.பி.ரகீவன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: திரு.எஸ்.வி.எம். குணரட்ணம் தம்பதியர் (அதிபர்.எஸ்.வி.எம்.நிறுவனம்)
கடவுள் வாழ்த்து: திருமதி.சுகன்யா அரவிந்தன்
ஆசியுரை:
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்(நல்லை ஆதீன முதல்வர்)
- அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம்
- மௌலவி என். எம்.எம். இர்பான்(நூரி) (நிறைவேற்றுக்குழு உறுப்பினர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை)
- பொகவந்தலாவ இராகுல தேரர்.

வாழ்த்துரை: கௌரவ சீ.வி.கே.சிவஞானம் (வடமாகாண சபை முதல்வர்)
தலைமையுரை: மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன் (பெருந்தலைவர், கொழும்புக் கம்பன் கழகம்)
தொடக்கவுரை: திரு.ம.பிரதீபன் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)

**இலக்கிய ஆணைக்குழு**

ஆணையாளர்:
முனைவர் பாரதி கிருஷ்ணகுமார்
பொருள்:
"மாட்சிமை பெற்ற வாழ்க்கைத்துணை எனும் விருதுக்குரியவர்?"

கோசலையே!-ந.விஜயசுந்தரம்
தாரையே!-ஐ.கதிர்காமசேகரன்
மண்டோதரியே!-சி.கேசவன்



முனைவர் பாரதிகிருஷ்ணகுமார் (தமிழ்நாடு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்கா சென்றடைந்தார் இந்தியப் பிரதமர் மோடி



(வோஷிங்டன்)

பிரான்ஸ் பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி அமெரிக்கா சென்றடைந்தார்.

விமான நிலையம் சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் பிரதமர் மோடியை வழியனுப்பி வைத்தார்.


பிரதமர் நரேந்திரமோடி அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ், அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த 10ஆம் திகதி பிரான்ஸ் சென்ற பிரதமர் மோடி தலைநகர் பாரிஸில் நடைபெற்ற சர்வதேச செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பங்கேற்றார்.

இந்நிலையில், பிரான்சில் சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி அமெரிக்கா சென்றடைந்தார். அவரை அதிகாரிகள் வரவேற்றனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றபின் முதல் முறையாக அவரைப் பிரதமர் மோடி சந்திக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## தாய்வான் வணிக வளாகத்தில் வெடிப்புச் சம்பவம்

- 4 பேர் பலி
- 20 பேர் காயம்



(தாய்பேய்)

தாய்வானில் தைசங் நகரிலுள்ள வணிக வளாகத்தில் 12 ஆவது மாடியில் வாயு வெடிப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளதோடு 20 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 2 பேர் சீனாவின் நிர்வாகத்திற்கு உட்பட்ட மக்காவ் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் சுற்றுலாவுக்காக சென்ற இடத்தில் இவர்கள் பலியாகி உள்ளனர். இதனை மக்காவ் சுற்றுலா அலுவலகம் உறுதி செய்துள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி விசாரிக்கும்படி அனைத்து அதிகாரிகளுக்கும் தாய்வான் ஜனாதிபதி லாய் சிங்-தே உத்தரவிட்டுள்ளார். (நி-8)

## புதிய மிரட

(ஜெருசலேம்) -
ஹமாஸ் மீது பு
இருந்து பாலஸ்
ஜனாதிபதி டொ
இருப்பதாகவும் அ

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய மாட்டோம் என்று ஹமாஸ் அமைப்பு கூறிய சிறிது நேரத்திலேயே இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் குறித்த பதிலை வெளியிட்டுள்ளார்.

மேலும் பணயக்கைதிகளை ஹமாஸ் படைகள் விடுவிக்க மறுத்தால் தங்களுக்கு வேறு வழியில்லை என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நடைமுறைக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்
கட்டார்
கள் பே
இந்
மாதங்
சண்ண
நிறுத்
இஸ்ரே
பாலஸ்
இஸ்ரே
குழுக்
விடுவி
ஆ
நாள்
மானத
உள்ள

## மீண்டும் பூமிக்கு திரும்பும் சுனிதா வில்லியம்ஸ்




(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கித் தவிக்கும் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் எதிர்வரும் மார்ச் மாத மத்தியில் பூமிக்கு மீண்டும் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகிய இருவரும் ஆய்வுக்காக கடந்த ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி போயிங் ஸ்டார் லைனர் விண்கலத்தில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு சென்றனர்.

இவர்கள் இருவரும் ஆய்வுகளை நிறைவு செய்து 8 நாட்களில் பூமிக்கு திரும்ப இருந்த நிலையில், இவர்கள் பயணித்த ஸ்டார்லைனர் விண்கலத்தில் விண்கலத்தின் த்ரஸ்டர்களில் கோளாறு, வாயு கசிவும் கண்டறியப்பட்டதால் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் பூமிக்கு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில் அவர்கள் இருவரும் கடந்த 6 மாதங்களாக சர்வதேச விண்வெளி மையத்திலேயே சிக்கியுள்ளனர்.அதேவேளை, அவர்கள் அங்கு நலமுடன் இருக்கிறார்கள் எனத் தெரிவித்த அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, அவர்கள் விரைவில் பூமி திரும்புவார்கள் எனக் குறிப்பிட்டது. சுனிதா வில்லியம்ஸ், வில்மோரை மீட்டுக் கொண்டு வருவதற்கு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விரைவில் ரொக்கெட் அனுப்பவுள்ளது என நாசா அறிவித்துள்ளது.

அதன்படி, எதிர் வரும் மார்ச் 12ஆம் திகதி இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்படும் எனத் தெரியவந்துள்ளது. இதன்மூலம் அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

## லிபிய கடற்பகுதியில் படகு விபத்து
### பாகிஸ்தானைச் சேர்ந்த 16 பேர் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

லிபிய கடற்பகுதியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பாகிஸ்தானைச் சேர்ந்த 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஐரோப்பாவில் சட்ட விரோதமாகக் குடியேறுவதற்காக பாகிஸ்தானைச் சேர்ந்த 63 பேர் பயணித்த படகொன்று நீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்த நிலையில் 10 பேரை காணவில்லை எனவும் 37 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்கள் ஐரோப்பாவிற்கு ஆபத்தான மற்றும் சட்ட விரோதப் பயணங்களைத் தொடங்குவதற்காக கடத்தல்காரர்களுக்கு பெரும் தொகை பணத்தைச் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட ஆபிரிக்காவை ஐரோப்பாவிலிருந்து பிரிக்கும் மத்திய தரைக்கடலில் மூழ்கும் நெரிசலான படகுகளில் மூழ்கி விபத்துக்குள்ளானவர்களில் பாகிஸ்தானியர்களும் உள்ளனர்.

இது உலகின் மிகவும் ஆபத்தான புலம்பெயர்ந்தோர் பாதையாகும்.

பாகிஸ்தானியர்கள் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 40,000 சட்டவிரோதப் பயணங்களை முயற்சிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப போர் ஆரம்பம்

# ட்டும் இஸ்ரேல்!

ம்)

**து புதிய போரை தொடங்குவதாகவும், காசாவில் லஸ்தீனியர்களை வெளியேற்றும் அமெரிக்க டொனால்ட் ட்ரம்பின் திட்டத்தைச் செயல்படுத்த வும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.**



ஒப்பந்தத்தைக் காப்பாற்ற கட்டார் மற்றும் எகிப்து நாடுகள் போராடி வருவதுடன்,

இந்தப் போர் நிறுத்தம் 15 மாதங்களுக்கும் மேலான சண்டையை பெருமளவில் நிறுத்தியுள்ளது. மேலும் இஸ்ரேலியக் காவலில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு ஈடாக இஸ்ரேலியக் கைதிகள் சிறிய குழுக்களாக ஹமாஸினால் விடுவிக்கப்பட்டு வந்துள்ளனர்.

ஆனால் தற்போது 42 நாள் முதல் கட்ட ஒப்பந்தமானது, அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

போர் நிறுத்தத்தின் அடுத்த கட்டம் குறித்து இன்னும் உடன்படாத இரு தரப்பினரும் மீறல்கள் குறித்து பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளனர். இது போர் மீண்டும் தொடங்கக்கூடும் என்ற கவலையைத் தூண்டியுள்ளது.

இந்நிலையில் நாளை சனிக்கிழமை ஹமாஸ் பணயக்கைதிகளை விடுவிக்கத் தவறினால் இஸ்ரேல் தனது போரை மீண்டும் தொடங்கும் என்று காட்ஸ் எச்சரித்துள்ளார்.

அத்துடன் ஹமாஸ் படைகளின் முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

முன்னதாக, காசாவைக் கைப்பற்றி, அதன் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களை ஜோர்தான் அல்லது எகிப்துக்கு மாற்ற ட்ரம்ப் திட்டமிட்டு வருகிறார்.

இது சர்வதேச சட்டத்தை மீறும் நடவடிக்கை என்று நிபுணர்கள் கூறுகின்ற நிலையில், இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இதை புரட்சிகரம் என்று வரவேற்றுள்ளார்.

மேலும் காசா பகுதியில் உள்ள பாலஸ்தீன மக்களை மொத்தமாக நாடு கடத்தும் டொனாலட் ட்ரம்பின் திட்டத்திற்கு அரபு நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

து
ப்பு



கவும்
தோர்

ஒவ்
சுமார்
ப் பய
தாகத்
ளமை
(நி-8)

## ஈரான் அணுஆயுத ஆலை மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டம்

(வோஷிங்டன்)

ஈரானில் உள்ள அணு ஆயுத ஆலை மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டம் தீட்டி இருப்பதாக அமெரிக்க உளவுத்துறை தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

ஈரான் அணுஆயுதம் தயாரிப்பதில் முழுக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

புதிதாக பதவியேற்ற ட்ரம்ப், ஈரானுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில், உரிய நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேல், ஈரானில் உள்ள அணு ஆலைகளைக் கண்டுபிடித்துள்ளது.



இந்த ரகசிய பகுதியின் வரைபடமும் இஸ்ரேல் வசம் உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த ஆண்டின் மத்தியில் ஈரானில் உள்ள அணுஆயுதங்கள் மீது ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கு அமெரிக்காவின் முழு ஒத்துழைப்பு அவசியம் என அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு உதவி கோரியுள்ளது.

இதற்கு ட்ரம்ப் அரசு பச்சைக்கொடி காட்டியதாகவும் தெரிகிறது. இத்தகவல் அமெரிக்க உளவுத் துறையை மேற்கோள் காட்டி அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

## பிரான்ஸ் மதுபான நிலையத்தில் கைக்குண்டு தாக்குதல்



(பாரிஸ்)

தென்கிழக்கு பிரான்சின் கிரெனோபில் நகரில் அமைந்துள்ள மதுபான நிலையம் ஒன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்டதில் குறைந்தது 12 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தனர்.

இவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்த அனைவரும் கிரெனோபிள் ஆல்ப்ஸ் பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் நிரம்பியிருந்த மதுபான நிலையத்துக்குள் நுழைந்த தாக்குதலாளி ஒரு வார்த்தையும் பேசாமல் கையெறிகுண்டுகளை வீசியதாகச் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியங்கள் தெரிவித்துள்ளன.

இது பயங்கரவாதத் தாக்குதல் என சந்தேகிக்கப்படவில்லை என்று தெரிவித்த புலனாய்வாளர்கள் சம்பவத்தின் நோக்கம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் காற்றாலை திட்டத்திலிருந்து விலகும் அதானி நிறுவனம்



(கொழும்பு)

மன்னார் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த 1 பில்லியன் டொலர் பெறுமதியான புதுப்பிக்கத்தக்கக் காற்றாலை மின்னுற்பத்தி மையத்தின் வேலைத் திட்டத்தை அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் கைவிடுவதாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதானி நிறுவனத்தின் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபைக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளார்.

484 மெகாவோட் மின்னுற்பத்திக்காக மன்னார் மற்றும் பூநகரியில் புதுப்பிக்கத்தக்கக் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தினை அமைப்பதற்கும், அதன் சேவையைத் தென்னிலங்கையில் விஸ்தரிப்பதற்கான மேலும் இரண்டு மின் மையங்களை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் அதானி நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவிருந்தது.

இதுதொடர்பாக 14 சுற்றுப் பேச்சு வார்த்தைகளை அதானி நிறுவனம் அரசாங்கத்தின் அதிகாரிகளுடன் நடத்தியதாக இலங்கை முதலீட்டுச் சபைக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி மையத்துக்கு எதிரான வழக்கு மற்றும் சுற்றாடல் அறிக்கையைத் தவிர்த்து ஏனைய அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுவிட்டன.

வேலைத்திட்டத்தின் ஆரம்ப கட்டப் பணிகளுக்காக 5 மில்லியன் டொலர் வரையில் செலவிடப்பட்டுள்ளது. எனினும் மின்னுற்பத்தி வேலைத் திட்டம் தொடர்பில் மீண்டும் மீளாய்வுப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்காக அமைச்சரவையின் உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்துக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அது குறித்து நிறுவனத்தின் நிர்வாக சபையில் கலந்துரையாடப்பட்டதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இருக்கின்ற இறைமையை முழுமையாக மதிப்பதாகத் தெரிவித்துள்ள அதானி நிறுவனம், கௌரவத்துடன் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதிலிருந்து விலகிக் கொள்ள முடிவு செய்வதாகவும் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் அதானி நிறுவனம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கிபா-5
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:
HNDA,Cashier(pvt)
எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/15122

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா-42 1/2
உயரம் :5'6"
தகைமை/தொழில்:HNDin Construction Teachnology,Teachnical Assistant
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15124

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
தகைமை/தொழில்:O/L,France
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/15129

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2002-இந்து
நட்சத்திரம் :ரோகினி
கி.பா:40
1இல் செவ்
உயரம் : 4'9"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம் வெளிநாடு
தொ.இ: G/15130

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:அனுசம்
கிபா-35 1/4
உயரம் : 5'
தகைமை/தொழில்:MBBS ,Doctor
எதிர்பார்ப்பு:Doctor
தொ.இ: G/15134

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:உத்திரட்டாதி
கி.பா:0
1இல் செவ்
உயரம்:5'
தகைமை/தொழில்:
HNDin Managemant
எதிர்பார் ப் பு:அரசஉத்தியோகம், பட்டதாரி
தொ.இ: G/15137

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3291

### காவேரி




### ஜெர்ரிஷ்




### டிலக்ஷா




### மீரா




### மதன்




### வேணி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறி-மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

(கொழும்பு)

எல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹல்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த லொறி ஒன்று அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில், மோட்டார் சைக்கிளானது வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு அருகிலிருந்த தொலைபேசிக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர், தெமோதரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# வயல் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## ஒதியமலை கிராமமக்கள்

(நெளுக்குளம்)

**கருவேப்ப முறிப்புக்குளத்தின் கீழான வயல் காணிகளை வனவளத் திணைக்களத்தினரிடம் இருந்து மீட்டுத் தாருங்கள் என அப் பகுதி மக்கள் கோரிக்கை.**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஒதியமலைக்கிராமத்தில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நேற்றையதினம் நடாத்தியுள்ளார்.

இதன்போது ஒதியமலைப்பகுதியில் அமைந்துள்ள கருவேப்ப முறிப்புக்குளத்தின் கீழான வயல்நிலங்கள் வனவளத் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் பாரிய நிதிச் செலவில் சீரமைக்கப்பட்ட கருவேப்ப முறிப்புக்குளம் பயன் பாடின்றிக் காணப்படுகின்றது. எனவே குறித்த விவசாயக் காணிகளை விடுவிப்பு செய்துதருமாறும் இதன்போது அப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந் நிலையில் அப்பகுதி மக்களின் முறைப்பீட்டிற்கு அமைய கருவேப்ப முறிப்புக் குளத்தையும், வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அக்குளத்தின் கீழான வயல் நிலங்களையும் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

இதன்போது பொது மக்களிடம் மகஜர்களையும் பெற்றுக் கொண்டதையடுத்து மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து தம்மால் கவனஞ்செலுத்தப்படும் என தெரிவித்தார். (6-8-299)

# காலம் தாழ்த்துவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை

## நெல் சந்தைப்படுத்தல் சபை

(தருமபுரம்)

பதிவு செய்யப்படாத அனைத்து நெல் களஞ்சியசாலை உரிமையாளர் கள் மற்றும் அரிசிஆலை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரை பதிவு செய்யப்படாதவர்களுக்காக ஒரு மாத காலம் தற்பொழுது நீடிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அனைத்து நெல் களஞ்சிய சாலைகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தமது பதிவினை விரைவாக மேற்கொள்ளுமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தெரிவித்துள்ளார். (6-8-316)

# எரிசக்தி தொழில்நுட்பங்கள் பயனாளர்களுக்கு வழங்கி வைப்பு



(முல்லைத்தீவு)

ஜப்பான் நாட்டின் நிதிப் பங்களிப்பில் UNDP நிறுவனத்தினால் காலநிலை மாற்றம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்களை அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட மல்லிகைத்தீவு கிராமத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் அகியோ ஐசோமாட்டா மற்றும் UNDP நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி எம்.எஸ். அசுசா குபேட்டா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்களை தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு வழங்கி வைத்தனர்.

மேலும் UNDP நிறுவனமானது குறித்த பகுதி யில் உயிரியல் வாயு தயாரிப் புக்கான உதவிகளை வழங்கியுள்ளதோடு இதனால் உயிரியல் வாயு சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்டு மக்கள் பலன் அடைவதையும் நேரில் பார்வையிட்டனர். இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், ஏனைய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8)

# இலங்கைக்கு கடத்தவிருந்த இஞ்சி மூடைகள் பறிமுதல்



(மன்னார்)

இலங்கைக்கு கடத்த இருந்த உலர்ந்த இஞ்சி மூடைகள் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் ஒருங்கிணைந்த குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று அதிகாலை திருப்புல்லாணி அடுத்த தோப்புவலசை கடற்கரையிலிருந்து படகு மூலமாக உலர்ந்த இஞ்சி இலங்கைக்கு கடத்தப்பட இருப்பதாக கிடைத்த தகவல் அடிப்படையில் ஒருங்கிணைந்த குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் சேதுகரையிலிருந்து தோப்புவலசை வரை கடற்கரை ஓரம் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது தோப்புவலசை கடற்கரைப் பகுதியில் 50 சாக்கு மூடைகளில் சுமார் இரண்டு டன் எடை கொண்ட உலர்ந்த இஞ்சி மூடைகள் படகில் ஏற்றுவதற்காகக் கடற்கரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து உலர்ந்த இஞ்சி மூடைகளை பறிமுதல் செய்த பொலிஸார் அதனை திருப்புல்லாணி காவல் நிலையத்தில் ஒப்படைத்து பின்னர் இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-285)

# பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் பூநகரியில் திறப்பு





(தருமபுரம்)

தேசிய மக்கள் சக்தியின் பூநகரிப் பிரதேசத்திற்கான பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் நேற்று வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன் கலந்து கொண்டு குறித்த கட்சி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதேச அமைப்பாளர், கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8-309)



முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலை இரத்த வங்கியினரால் கடந்த 4 ஆம் திகதி இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது. (படம்-சதீஷ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 702





வானதி யானையின் அம்பாரிக் கூரை வழியாக மேலே வானத்தில் தெரிந்த நட்சத்திரங்களைப் பார்த்தாள். வானவெளியில் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களுக்கும், பூலோகத்தில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்க முடியுமா என்று அதிசயப்பட்டாள். பொன்னியின் செல்வர் உதித்த நட்சத்திரத்துக்கும், தான் பிறந்த நட்சத்திரத்துக்கும் உள்ள பொருத்தத்தை பற்றி ஜோதிடர்கள் சொல்வதில் ஏதேனும் உண்மையிருக்குமா? தன் வயிற்றில் பிறக்கும் மகன் மூன்று உலகத்தையும் ஆளப் போகிறான் என்று ஜோதிடர்களுடன் சேர்ந்து அக்காவும் சொல்வது உண்மையாகுமா? வால் நட்சத்திரம் தோன்றுவது ஏதோ உற்பாதத்துக்கு அறிகுறி என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்களே, அது எவ்வளவு தூரம் நிஜமாயிருக்கும்?

அப்படி என்ன உற்பாதம் நடக்கும்? பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கியது தான் அந்த உற்பாதமா? அக்கா கொண்டுள்ள நம்பிக்கையின்படி அவர் திரும்பி வருவாரா? அப்படியானால், வேறு என்ன உற்பாதம் நடக்கக் கூடும்!

இம்மாதிரியெல்லாம் வெகு நேரம் சிந்தனை செய்து கொண்டிருந்த பிறகு வானதி இலேசாகக் கண்ணயர்ந்தாள். அவள் கண்விழித்துப் பார்த்தபோது, பொழுது புலர்ந்திருந்தது. புள்ளினங்கள் உதய கீதம் பாடின. இளைய பிராட்டியும் விழித்துக் கொண்டிருந்தாள். அம்பாரியின் பட்டுத் திரையை விலக்கி கொண்டு வெளியே பார்த்து, "இதோ ஆனைமங்கலம் வந்து விட்டோம். சோழ மாளிகையின் வாசலுக்கே வந்து விட்டோம்" என்றாள்.

இரு இளவரசிகளும் யானை மீதிருந்து இறங்கினார்கள். மாளிகைக்குள்ளே பிரவேசித்தார்கள். அங்கே ஆயத்தமாயிருந்த அரண்மனைத் தாதிமார்கள் இளவரசிகள் இருவரையும் மாளிகையின் எல்லாப் பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினார்கள். கடைசியில், மாளிகையின் கீழ்ப்புறத்துக்கு வந்து, அங்கிருந்த அலங்கார முன்றின் முகப்பில் நின்றபடி கடலுடன் கலந்த கால்வாயைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"அக்கா! இளவரசரைத் தேடுவதற்கு ஏற்பாடு செய்யப் போவதாகச் சொன்னீர்களே? என்ன செய்திருக்கிறீர்கள்?" என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

"ஆமாடி வானதி! தேடுவதற்கு ஏற்பாடு ஆரம்பமாகி விட்டது. அதோ பார், ஒரு படகு வருகிறது! அதில் வருகிறவர்கள் ஒரு வேளை ஏதேனும் செய்தி கொண்டு வந்தாலும் கொண்டு வருவார்கள்!" என்றாள் குந்தவை.

வானதி திரும்பிப் பார்த்தாள். சற்றுத் தூரத்தில் மரக்கிளைகளின் இடைவெளியில் ஒரு சிறிய படகு வருவது தெரிந்தது. அதில் இருவர் இருந்தார்கள். "அக்கா! அந்தப் படகில் வருவது யார்?" என்று வானதி கேட்டாள்.

"படகு தள்ளுகிறவன் சேந்தன் அமுதன். தஞ்சாவூர்ப் பாதாளச் சிறையிலிருந்து நாம் அன்றொரு நாள் விடுதலை செய்தோமே, அவன். உட்கார்ந்திருப்பவள் பூங்குழலி!" வானதிக்கு உடம்பு சிலிர்த்தது. "அக்கா! நான் அந்தப் பெண்ணைப் பார்க்க விரும்பவில்லை, உள்ளே போகிறேன்!" என்றாள்.

"என்னடி அவளைக் கண்டு அவ்வளவு பயம்! உன்னை அவள் விழுங்கி விடுவாளா என்ன? நான் பார்த்துக் கொள்கிறேன்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## ஆணவத்தின் முடிவு அவமானம்



ஒரு காலத்தில் வடக்கிலிருந்து வீசும் வாடைக் காற்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த வருடத்துக் குளிர் காலம் நீண்டதாகவும் அதிக குளிருடனும் இருந்ததால் வாடைக் காற்று மிக கர்வம் அடைந்தது. 'உலகம் முழுவதையும் என்னால் கடும் குளிரில் உறைய வைக்க முடிந்தது.

பூமியிலேயே மிகவும் வலிமை வாய்ந்த சக்தியாக நான் விளங்குகிறேன். என்னை விட வலிமையானவர் யாரும் இல்லை, என்று காற்று அதிகமாக பெருமைப்பட்டுக் கொண்டது.

அதிக நேரமாக இதனுடைய பேச்சைக் கேட்ட பிறகு சூரியனுக்கு அலுத்து விட்டது. மேகங்களுக்குப் பின்னால் இருந்து எட்டிப் பார்த்த சூரியன், வாடைக்காற்றை கூப்பிட்டது.

"வலிமையும் பலமும் பொருந்திய இயற்கை சக்தியான நீ இவ்வாறு பெருமைப்பட்டுக் கொள்வது நல்லதன்று. நம் ஒவ்வொருவருக்கும் செய்ய வேண்டிய ஒவ்வொரு வேலை உண்டு," என்று சூரியன் கூறியது.

ஆனால் வாடைக் காற்று மிக மிக அதிகமாக தன் வலிமையை நினைத்து கர்வப்பட்டு கொண்டிருந்ததால் சூரியன் கூறியது எதையும் கேட்பதாக அது இல்லை.

"என்னளவு பலம் உனக்கு இல்லாததால், நீ இவ்வாறு என்னிடம் சொல்கிறாய். இந்தப் பூமியில் எதை வேண்டுமானாலும் சாதிக்க என்னால் முடியும்," என்று மிக அலட்சியமாகப் பதில் கூறியது வாடைக் காற்று. சூரியனுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது.

உனக்கு ரொம்ப வலிமை இருப்பதாகவும் இந்த பூமியில் உன்னால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்றும் நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால், உன்னால் சிலவற்றை தான் செய்ய முடியும்," என்று சூரியன் சொன்னது.

இதைக் கேட்டு சிரித்த காற்று "என்னால் செய்ய முடியாதது என்ற ஒரு விஷயத்தை நீ கூறு, பார்க்கலாம்," என்று சவால் விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பராமரிப்புத் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்

பராமரிப்பு என்பது மிகவும் முக்கியமான தோர் விடயம். எனினும் பராமரிப்பு என்பது பற்றிய எமது மனநிலை ஆரோக்கியமானதாக இல்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் எங்களின் கல்வி முறைமையும் ஒரு காரணம் என்பதை இங்கு சுஹித்தானாக வேண்டும்.

அதாவது வெளிநாடுகளில் கல்வி என்பது மனித வாழ்வியலின் மேன்மையை உயர்த்து வதை நோக்காகக் கொண்டது.

அதில் முக்கியமான விடயம் பொதுச் சொத் துக்களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதுமாகும்.

உண்மை. சொத்துக்களைப் பாதுகாக் கின்ற எண்ணக்கருவை சிறுபராயத்திலி ருந்து ஏற்படுத்த வேண்டும்.

அதிலும் குறிப்பாக, பொதுச் சொத்துக்கள் பொதுமக்களின் நன்மை கருதி உருவாக் கப்பட்டவை என்பதை சிறுபராயத்திலிருந்து உணர்த்தும்போது அது மனித மனங்களில் ஆழப் பதிந்து கொள்ளும்.

அவ்வாறான மனநிலை ஏற்பட்டுவிட்டால், பொதுச்சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு அது போதுமானது.

எனினும் துரதிஷ்டவசமாக, எங்கள் கல்வி முறைமையானது மன அழுத்தத்தை ஏற்படுத் துவதாக இருக்கின்றதேயன்றி, மனித விழுமியங்களை வளர்ப்பதாக இல்லை என் பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

இதனை உறுதிப்படுத்துவதற்கு பலவற்றைச் சான்றுப்படுத்த முடியும். உதாரணத்துக்கு பொதுமக்களின் பாவனைக்குரித்தான வீதி கள் மற்றும் அரச கட்டடங்களின் பராமரிப்புத் தொடர்பில் நாம் நுணுகிப்பார்ப்போமாக இருந்தால், எங்கள் அரச சொத்துக்களில் கணிசமானவை பராமரிப்பின்றி சேதமடை வதைக் கண்டுரை முடியும்.

ஆம், எத்தனை கோடி ரூபாய்களில் அரச கட்டடங்களை அமைத்தாலும் அதனை செம்மையாகப் பராமரிப்பதில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கவனம் செலுத் துவதில்தான் எல்லாம் தங்கியுள்ளது.

ஆனால் எங்கள் அரச திணைக்களங் களைப் பார்த்தால் அங்கு பராமரிப்பென்பது பூச்சியமாகவே உள்ளது.

அதிலும் குறிப்பாக கட்டடத்தில் பொருத்தப் பட்ட மின் விசிறிகள், கட்டடத்தின் மேற்பகுதி மற்றும் நீர் விநியோகத்திலுள்ள குழாய்கள், கழிப்பறைகள் போன்றவற்றைப் பார்க்கும் போது அவை எந்தவித பராமரிப்பும் இன்றி முற்று முழுதாக பாதிப்படைந்திருப்பதைக் காண முடியும்.

இதற்கும் மேலாக, அலுவலகங்களின் சுற்றுப்புறச் சூழலை பார்ப்போமாக இருந்தால், குறித்த திணைக்களத் தலைவர் தமது அலு வலகத்தைத் தவிர அந்தக் கட்டடத்தின் ஏனைய இடங்களைச் சுற்றிப் பார்க்கவில்லை என்பது தெரியவரும். இதுபோன்றுதான் வீதிகளின் நிலைப்பாடும்.

எனவே பொதுச் சொத்துக்களைப் பராமரிப் பது தொடர்பில் அதிகூடிய கவனம் எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## பண்டத்தரிப்பில்
# குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

பண்டத்தரிப்புப் பகு தியில் குடும்பஸ்தர் ஒரு வர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டு ள்ளார்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பைச் சேர் ந்த சிதம்பரநாதன் தயா னந்தன் (வயது - 40) என்ற இரண்டு பிள்ளை களின் தந்தையே உயிரி ழந்தவராவார்.

சடலம் இளவாலைப் பொலிஸாரால் மீட்கப்ப ட்டு பிரேதப் பரிசோத னைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையில் ஒப்படைக்கப்ப ட்டுள்ளது. மரணம் தொட ர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதி காரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற் கொண்டார். (ம-7)

# சட்டமா அதிபரை நீக்க இடமளியோம்

சட்டமா அதிபரை பத வியிலிருந்து நீக்கும் எந்தவொரு முயற்சிக் கும் எதிராக வாதிடுவத ற்குத் தயங்கப்போவதி ல்லை என சட்டமா அதி பர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகள் சங் கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, குறித்த சங்கம் வெளியிட்டுள்ள அறிகையில்,

அண்மைக்காலமாக சட்டமா அதிபர் தொட ர்பில் பரப்பப்படும் தவ றான மற்றும் அவதூ றான கருத்துக்கள் தொட ர்பில் எமது சங்கம் ஆழ் ந்த கவலையடைகிறது.

லசந்த கொலை வழ க்கில் சந்தேகநபர்கள் மூவரை விடுதலை செய் வதற்குக் கடந்த தினம் சட்டமா அதிபர் வழ ங்கிய பரிந்துரைகள் சட் டமா அதிபர் திணைக் களத்தின் மரபுக்கு அமைவாகவே மேற்கொ ள்ளப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உரிய சட்ட விடயங்களை கருத்திற்கொண்டு அத ற்கான சிபாரிசுகள் செய் யப்பட்டுள்ளதாகவும், அந்தத் தீர்மானத்தில் எமது சங்கம் மிகுந்த நம் பிக்கையை வெளிப்படு த்துவதாகவும் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள் ளது.

மேலும், சட்டமா அதி பர் திணைக்களம் உயர் மரபுகளுக்கு அமைவாக தனது சுயாதீனத் தீர் ப்பை பிரயோகித்துள் ளதாகவும், சட்டமா அதி பரை பதவியிலிருந்து நீக் கும் எந்தவொரு முயற் சியையும் எதிர்ப்போம் என்றும் சட்ட அதிகா ரிகள் சங்கம் அறிக்கை யூடாக சுட்டிக்காட்டியுள் ளது. (ம-7)

# 13 வயது மகளை துன்புறுத்திய தாய்
## கைதாகி பிணையில் விடுதலை

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி யில் தனது 13 வயதான மகளை அடித்துத் துன் புறுத்திய குற்றச்சாட்டில் தாயாரொருவர் பொலி ஸாரினால் கைது செய் யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்டப் பகுதி யில் வசிக்கும் குடும்பம் ஒன்றில் தந்தையைப் பிரிந்து வேறொரு இடத் தில் வாழ்ந்து வரும் நிலை யில் இரு பிள்ளைகளும் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்துள்ளனர்.

அவ்வாறான சூழ்நி லையில் தாயார் தனது மூத்த மகளை அடித்து துன்புறுத்துவதாக கோப் பாய் பொலிஸ் நிலையத் தில் மூன்று தடவைகளு க்கு மேல் முறைப்பாடு கள் கிடைக்கப்பெற்று, பின்னர் மகளை அடித் துத் துன்புறுத்தக்கூடாது எனத் தாய்க்கு பொலி ஸார் கடுமையாக எச்சரி த்து அனுப்பி வைத்துள்ள னர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தாய் தன்னை அடித்து துன்புறுத்துவதாகவும் அதனால் தான் உயிரை மாய்க்கப் போவதாகவும் மகள் தனது தந்தையின் சகோதரிகளுக்கு தொலைபேசி ஊடாக தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து பிள் ளையின் தந்தையின் சகோதரிகள் பொலிஸா ருக்குத் தகவல் வழங்கி பொலிஸாருடன் சென்று மகளை மீட்டு வந்துள் ளனர்.

இதனையடுத்து பொலிஸ் விசாரணை களின் பின்னர் நேற்று முன்தினம் புதன் கிழமை தாயாரைக் கைது செய்த பொலிஸார் மகளையும் தாயையும் யாழ்ப்பாண நீதவான் முன்னிலை யில் முற்படுத்திய வேளை மகளை, சட்டவைத்திய அதிகாரி முன்பாக முற் படுத்தி வைத்திய அறிக் கையைப் பெற பொலி ஸாருக்கு உத்தரவிட்ட மன்று, தாயாரைப் பிணை யில் செல்ல அனுமதித் தது. (ம-7)

# கோல்கம்பம் சரிந்து வீழ்ந்ததில் சிறுவன் பலி
## உடலுறுப்புகளைத் தானம் செய்த பெற்றோர்

பொலநறுவை, தல்பொத பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுவன் ஒருவன், பாட சாலை விளையாட்டு மைதானத்திலிருந்த கால்பந்து கோல் கம்பம் சரிந்து விழுந்ததில் உயி ரிழந்துள்ளான்.

இந்நிலையில் அவ ரது உடலுறுப்புகள் தானம் செய்யப்பட்டுள் ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது,

பொலநறுவையில் உள்ள ஒரு பாடசா லையில் தரம் 6 இல் கல்வி கற்கும் கவிந்து தெனுவன் எனும் சிறு வன் நேற்று முன்தினம் மாலை தனது அக் காவின் விளையாட்டுப் போட்டியைக் காணத் தனது தாயாருடன் பொலநறுவை தோபா வெவ மகாவித்தியால யத்திற்கு அருகில் அமை ந்துள்ள மைதானத்தி ற்குச் சென்றுள்ளார்.

மைதானத்திலிருந்த கோல் கம்பத்தை அகற் றுவதற்கு முயன்றபோது, ஒரு பக்கம் துருப்பிடித் திருந்த கோல் கம்பத் தின் ஒரு பகுதி சிறுவ னின் தலையில் விழுந் துள்ளது.

உடனடியாக பொலந றுவை பொது வைத் தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு குறி த்த சிறுவனை எடுத்துச் சென்றபோதும், சிறுவன் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவி த்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவ னின் பெற்றோர் அவரது கண்கள் உட்பட உடல் உறுப்புகளை தானம் செய்யத் தீர்மானித்துள் ளனர். (ம-7)

## கோட்டை நீதிமன்றில்
# பசிலுக்கு எதிராக இரகசிய வாக்குமூலம்

(கொழும்பு)

பசில்ராஜபக்ஷ அமை ச்சராகக் கடமையாற் றியவேளையில் சுற்றுலா அபிவிருத்திக்காக 2014 ஆம் ஆண்டு ரூ. 6 மில் லியனுக்கும் அதிகமான செலவில் ரி-சேர்ட்கள் அச்சிடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு ரகசிய சாட்சியாளர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (13) முன்னி லையாகியுள்ளார்.

பசில்ராஜபக்ஷ பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சராகப் பணியாற் றிய காலத்தில் நடந்ததா கக் கூறப்படும் இந்த நிதி மோசடி தொடர்பான உண்மைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக் களம் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டது.

இந்த நிலையில், இது தொடர்பாக சுற் றுலா அபிவிருத்தி அதிகார சபையினைச் சார்ந்த ஒருவர் இந்த இரகசிய சாட்சியத்தை அளித்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

குறித்த இரகசிய சாட் சியம் பதிவானது பிற்ப கல் இரண்டு மணிய ளவில் தொடங்கி மூன்று மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்றுள் ளமை குறிப்பிடத்தக் கது. (ம-7)

# ஓ. எல் மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

கோப்பாய் சுப்பிரமு னிய கோட்டத்தினரால் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைக ளில் பயிலும் க.பொ.த. சாதாரண தர மாணவர் களுக்கான இலவசக்கரு த்தரங்கானது நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிமுதல் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை மானிப்பாயின் பட்டின உபமண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் சுப்பிரமு னிய கோட்ட ஸ்தாபகர் ரிஷிதொண்டுநாதன் சுவாமிகளின் தலைமை யில் மாணவன் டிதுஷ னின் வழிகாட்டலில் இடம்பெறும் இக்கரு த்தரங்கில் கணித பாட த்தை பிரபல கணித ஆசான் அசுபதிராஜ் அவர்களும் தமிழ்ப் பாட த்தை தமிழ்த்துறை முன் னோடியான தங்கரூபன் அவர்களும் கற்பிக்கவு ள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

19

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

(நேற்றைய தொடர்ச்சி...)

இங்கே தொடுக்கப்படும் வழக்குகள், மேலே கூறியவாறு அற்ப பிணக்காலானவை. அப் பிணக்கை முற்றவிடாது கட்சிக்காரர்களுக்கிடையே சமாதானத்தை உண்டாக்கி வழக்கைச் சமரசமாகத் தீர்க்கவே நீதவானும் அவரது ஆலோசகர்களும் முயற்சி செய்வர். சமரசம் ஏற்படாவிட்டால் தான் விசாரணை செய்து தீர்ப்பு அளிப்பர்.


### 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம்

கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகள் சட்டத்தின் கீழ் இருந்த அதிகாரங்கள் சகிதம் இவ்விரண்டு நிறுவனங்களினதும் பொறுப்புக்களைச் செயற்படுத்தும் வகையிலும் அமைந்த மாவட்ட அபிவிருத்திச் சபை எனப்படும் புதியதொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இச் சட்டத்தின் மூலம் அப்போதிருந்த பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் இல்லாது ஒழிக்கப்பட்டன. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்வாங்கப்பட்டனர். மேலும் குறைந் தளவு எண்ணிக்கையான மக்கள் உறுப்பினர்களே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள்.

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

உள்ளூராட்சி மன்றங்களில் முறையானதொரு உறுப்புரிமை முறைமை இல்லாதிருந்த காரணத்தினாலும், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மற்றும் கிராமோதய சபைகளினால் குறித்த விடயங்கள் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பிரதேச சபைகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் 1987.04.16 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் பற்றி முன்னர் ஒரு கட்டுரையில் ஆராய்ந்துள்ளோம். (முற்றும்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 700 | 800 | 650-700 | 700 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1000 | 900-1500 | 1200 |
| தக்காளி | 180 | 180 | 250 | 140 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 200-250 | 200 |
| கோவா | 350 | 300 | 250 | 300 | 350 |
| கரட் | 650 | 800 | 800 | 770 | 1000 |
| பூசணி | 120 | 120 | 150 | 80 | 200 |
| புடோல் | 200 | 250 | 200 | 250 | 320 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 400-500 | 500 |
| வெண்டக்காய் | 350 | 450 | 300 | 300 | 500 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 750 | 500 | 800 | 300-400 | 800 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 340 | 450 |
| பீற்றூட் | 160 | 200 | 250 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 1000 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | 1500 | 2000 |
| போஞ்சி | 350 | 350 | 300 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 600 | 700 | 400 | 600 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 150 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 300 | 250 | 150 | 150-200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 200 | 250 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 500 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 200 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 120 | 120 | 80 | 100 | 150 |

# இன்று ஒரு தகவல்

321



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## படிப்பும் புத்தியும்

ஒரு மாணவனைப் பார்த்தேன். என்ன தம்பி படிப்பு எல்லாம் எப்படி இருக்கு என்று விசாரித்தேன். அவன் மிகவும் அலுத்துக் கொண்டான். நான் நன்றாகத் தான் படிக்கின்றேன். இருந்தாலும் புத்தியிலே சரியாக ஏறுதில்லை சேர் என்றான். சரி இவனும் நம் ரகம் தான் என்று முடிவு செய்துவிட்டேன். கல்வி கற்கக்கூடிய ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட புத்திகள் பல வகை. அதைப்பற்றி ஒரு பெரியவர்(வாரியார் சுவாமிகள்) விளக்கியிருக்கின்றார்.

மிருத்து புத்தி என்ற ஒன்று. மிருத்து என்றால் மண். மண் சுவரிலே ஆணி அடிப்பது மிகவும் சுலபம். அதைப் பிடுங்கி எடுப்பதும் சுலபம். அது மாதிரி சில பேர் குரு சொல்லிக் கொடுப்பதை சுலபமாகக் கேட்டு தெரிந்து கொள்வார்கள். சிறிது நேரத்திலே மிகவும் சுலபமாக மறந்தும் போய் விடுவார்கள். இது மிருத்து புத்தி.

தாரு புத்தி என்ற ஒன்று. தாரு என்றால் மரம். அதிலே பச்சை மரத்திலே ஆணி அடிப்பது சுலபம். ஆனால் அதை எடுப்பது கஷ்டம். அது மாதிரி ஆசிரியரிடம் கேட்டதை மனதில் பதியவைத்துவிட்டு அதை மறக்காமல் இருப்பது தாரு புத்தி. பட்ட மரமாக இருந்தால் அதிலே ஆணி அடிப்பதும் கஷ்டம். அடிக்கின்ற ஆணியும் விரைவில் நழுவிவிடும். அது மாதிரி கேட்கின்ற விடயம் மனதிலே பதிவதும் கஷ்டம். அப்படியே பதிந்தாலும் சிறிது காலத்திலேயே மறந்து விடும்.

இன்னொரு வகைப் புத்தி ஒன்று உண்டு. அதன் பெயர் சிலா புத்தி. சிலா என்றால் கல். ஒரு கல்லிலே நான்கு துளையைப் போட்டு ஒரு துளையிலே உளியை வைத்து அடித்தால் மற்றத் துளை வழியாகவும் பிளந்து கல் இரண்டாகிவிடும். அது மாதிரி சரியான இடங்களிலே குறிப்பான ஒரு பொருளைச் சொன்னால் அதைக் கொண்டு மற்றவற்றையும் தெரிந்து கொள்வது சிலா புத்தி.

வேணு புத்தி என்றால் என்ன தெரியுமா? வேணு என்றால் மூங்கில். மூங்கில் கணுவிலே ஒரு பக்கம் உளி வைத்து அடித்தால் இரண்டு பக்கமும் பிளந்து விடும். அது மாதிரி ஒரு செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கின்ற போதே அதனுடைய முன் பின் தொடர்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது வேணு புத்தி.

தைல புத்தி என்ற ஒன்று உண்டு. தைலம் என்பது ஒரு என்ணெய். தண்ணீரிலே ஒரு துளி எண்ணெயை விட்டால் அது தண்ணீர் முழுவதும் பரவும். அது மாதிரி ஆசிரியர் சுருக்கமாக ஒரு கருத்தைச் சொன்னால் அதை வைத்துக் கொண்டு முழு விடயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது தைல புத்தி.

கற்பூர புத்தி தெரியுமா? கற்பூரம் தீ பட்டவுடனே எரிகின்றது. ஆசிரியர் சொன்னவுடனே நுண்ணறிவோடு பாடங்களைப் புரிந்து கொள்வது இந்த வகை.

கரிப்புத்தி என்ற ஒன்று. அது எப்படி என்றால் கரியிலே நெருப்பை வைத்து விசிறிய பிறகு கரி நெருப்பாகின்றது. அது மாதிரி காலை, மாலை வேளைகளிலே ஆசிரியர் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார். அதைக் கொண்டு புரிந்து கொள்வது இந்த வகை.

கதலித் தண்டுப் புத்தி என்று கூட ஒரு வகை உண்டு. கதலி என்பது வாழை மரம். வாழைத் தண்டிலே தீ வைப்பது எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமத்தோடு கல்வி கற்பது கதலித் தண்டுப் புத்தி. இதை விட இன்னும் சில வகையாகக் கூட மாணவர்களை இனம் பிரிப்பதுண்டு.

ஆசிரியர் சொன்னதிலே நல்லதை மட்டும் எடுத்துக் கொள்பவன் அன்னம். ஆசிரியர் கிடைத்த இடத்திலே பாடத்தைப் படித்து விட்டு பின்பு தனியாக உட்கார்ந்து சிந்தித்து புரிந்து கொள்பவன் பசு. பசு அப்படித் தானே கண்ட இடத்திலே புல் மேயும். அதன் பின் நிதானமாக அசை போடும்.

ஆசிரியர் சொன்னதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியதாவன் கிளி. பல இடங்களிலே பாடம் கேட்டு கடைசியிலே ஒன்றும் புரியாமல் போகின்றவன் ஆடு. ஆடு ஒரு செடியிலே வயிறார மேயாது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று அங்கேயும் இங்கேயும் அலையும்.

சில பேருக்கு எருமை என்று பேர். எருமை குளத்து நீரைக் கலக்கித் தான் குடிக்கும். அது மாதிரி ஆசிரியர் மனதை நோகச் செய்து பயில்கின்ற மாணவர்களெல்லாம் இந்த ரகம். இவ்வளவு எல்லாம் இருந்தாலும் இந்தக் காலத்து மாணவர்களெல்லாம் ஒரு தனி ரகம்.

ஒரு ஆசிரியர் வகுப்பிலே பாடம் நடத்திக் கொண்டிருந்தார். இலக்கண வகுப்பு. இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் இதைப் பற்றி பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது நான் ஒரு வாக்கியம் சொல்வேன் அது என்ன காலம் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும் என்றார் ஆசிரியர். சரி என்றார்கள் மாணவர்கள்.

நான் நாளைக்கு பாடம் நடத்தப் போகின்றேன். இது என்ன காலம் என்று கேட்டார் ஆசிரியர். ஒரு பையன் மெதுவாக எழுந்தான். இது எங்கள் போதாத காலம் சேர் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு...

பதி அநுர குமார திஸாநாயக்க நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி பல அரச தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், நேற்று முன்தினம் மாலை உலக அரச உச்சி மாநாட்டில் உரையாற்றியிருந்தார்.(ம-7)

## யாழ்ப்பாண...

மன்றம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் தமிழகத்து அறிஞர்களும் உள்ளூர் அறிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## தேசிய மாநாட்...

யப்பட்ட வழக்கு நேற்று திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி பயஸ் ரசாக் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கின் பிரதிவாதி ஒருவரை மாற்றுவது சம்பந்தமாகப் பிரச்சினை எழுந்தபோது அது குறித்துத் தீர்மானிப்பதற்காக வழக்கினை 4 மாதங்களுக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி அறிவித்தார். (ம-7)



















## மகிந்தவின்...

ராஜபக்ஷ தங்கியிருக்கும் பகுதியில் நீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கான நீர் கட்டணமானது ஜனாதிபதி செயலகத்தால் செலுத்தப்பட்டு வருவதாக மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார். (ம-7)

## கனேடிய...

கொள்ளவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

ஆளுநரின் சந்திப்பைத் தொடர்ந்து யாழ்.நகரின் மத்தியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் இடம்பெறும் நிகழ்விலும் அவர் பங்குகொள்ளவுள்ளார். (ம-7)

## விமான...

கப்பட்டு வரும் விமான சேவைகளை மேலும் அதிகரிப்பதற்கு இந்திய விமான நிறுவனமான இண்டிகோ தீர்மானித்துள்ளது.

தற்போது, இண்டிகோ விமான நிறுவனம் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே வாரத்திற்கு ஐந்து நாட்களுக்கு ஒரு விமானத்தை இயக்குகிறது.

இந்தநிலையில், எதிர்காலத்தில் மேலும் இரண்டு விமானங்களை இயக்கத் திட்டமிட்டுள்ளது. (ம-7)

## 3 பேரின்...

27ஆம் திகதி பரிந்துரை செய்திருந்தார்.

இந்நிலையில், குறித்த பரிந்துரையைத் தற்காலிகமாக இரத்துச் செய்வதாக சட்டமா அதிபர் கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். (ம-7)

## 2025...

பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில்ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில்பிரதமர் ஹரிணி அமரசூரியவின் வேண்டுகோளின் பேரில், பாராளுமன்றத்தின் நிலையியற்கட்டளைகள் 16 இன் விதிகளின் படி, இன்று சிறப்புப் பாராளுமன்றக் கூட்டம் கூட்டப்படவுள்ளது. (ம-7)

## தேசிய...

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக்கோரி கடந்த இரு நாட்களாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே புத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யாழ்.தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் இராணுவத்தினருடனும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளோம்.

இந்த விடயம் தேசிய ஐக்கியம் தொடர்பில் உணர்வுபூர்வமானதாக காணப்படுவதை கருத்தில் கொண்டு இது தொடர்பில் காணப்படும் குழப்பங்களிற்குத் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

இராணுவம் தற்போதுஅந்த ஆலயத்தை நிர்வகித்துவந்தாலும் அரசாங்கம் பௌத்த விவகாரங்களிற்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையைப் பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவம் தற்போது விகாரையை நிர்வகிக்கின்றதுடன், தற்போது அங்குகட்டுமாணப் பணிகள் இடம் பெறுகின்றன.

அதில் பௌத்த மதகுரு ஒருவர் அங்கு தங்கியுள்ளார். பாதுகாப்பு அமைச்சு, தன்னால் அதனைத் தொடர்ந்து நிர்வகிக்க முடியாது. பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன், இந்தப் பெயரில் விகாரை ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அங்கு நிலம் மட்டுமே உள்ளது.

மேலும் இராணுவத்தினரும் கடற்படையினரும் இரண்டு பௌத்த ஆலயங்களை நிர்வகிக்கின்றனர். இது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது,

இராணுவத்தினால் அதனை நிர்வகிக்க முடியாவிட்டால் அதற்குத் தீர்வைக் காண பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.(ம-7)

## குரங்குகளை...

கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிடிபட்ட குரங்குகளைக் கொண்டு சென்று விடுவிப்பதற்கு ஒரு தீவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த ஆராய்ச்சித் திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும், இது முழுமையாக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவரணவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கும், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை (13) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆசிரியர் சேவைச் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும், பிரதியமைச்சருமான பிரதீப் சுந்தரலிங்கம், ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெகதீஸ்வரன் ஆகியோரும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் கல்வி வலயத்தின் உள்ளக இடமாற்றம் 2 ஆண்டுகளாக முன்னெடுக்கப்படவில்லை என ஆசிரியர் சேவைச் சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், இடமாற்றச் சபையைக் கூட்டுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலர் பதிலளித்தார். அதேநேரம் இடமாற்றச் சபையில் சட்டரீதியான சங்கங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனப் பிரதியமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் கோரிக்கை முன்வைத்தார்.

இதேவேளை தேசிய இடமாற்றக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக செயற்பாடுகளை இலகுவாக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆலோசனை முன்வைத்தார். இலங்கையின் ஏனைய மாகாணங்களில், மாகாணத்துக்குள்ளான மாவட்டங்களின் பரம்பல் சீராகவுள்ளது எனவும், வடக்கு மாகாணத்தில் அவ்வாறானதொரு நிலைமை இல்லாமையால் தேசிய இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்தும்போது யாழ்ப்பாணத்தின் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வன்னிப் பிராந்தியத்தில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலைமை காணப்படும் என்று கல்வி அமைச்சின் செயலரும், பணிப்பாளரும் பதிலளித்தனர்.

இடமாற்றங்களின்போது அரசியல் தலையீட்டுக்கு அனுமதிக்கவேண்டாம் எனவும் சுயாதீனமாகச் செயற்படுமாறும் அவ்வாறு செயற்படும் போது அந்தச் செயற்பாட்டுக்கு பக்கபலமாக இருப்போம் என பிரதியமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார்.

சேவையின் தேவை கருதிய இடமாற்றங்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவற்றை கட்டுப்படுத்தியுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலர் இங்கு குறிப்பிட்டார். அவ்வாறான இடமாற்றங்கள் தொழிற்சங்கங்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இதன்போது முன்வைக்கப்பட்டது. (ம-7)


## வேலைவாய்ப்பு

- ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையில் ஆங்கில, தமிழ் ஆசிரியர் தேவை.(Female)
  நேர்முகத் தேர்வு : 17.02.2025 ம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் காலை 10.00 மணி வரை நடைபெறும்.
  (பழக விரும்புபவர்களுக்கு 3 மாதம் பயிற்சிகள் வழங்கப்படும்.)
- கணினி நிலைய வேலைவாய்ப்பு (Female)
  (Ms office, Photoshop, page maker, Corel draw தெரிந்தவர்கள்
- அலுவலக உதவியாளர் (ஆண்கள்)
  (ஆட்டோ, வான் ஓடக்கூடியவர், Licence உள்ளவர்)
  வேலை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.00
  நேர்முகத்தேர்வு : 17.02.2025 ம் திகதி காலை 11.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும்.

புத்தூர், திருநெல்வேலி, இணுவில் ஆகிய இடங்களிற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

(3413)

தொடர்புகளுக்கு : 077 377 0524

## பணியாளர்கள் தேவை


கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இயங்கும் குரு காட்வெயார் நிறுவனத்திற்கு 10Km க்கு உட்பட உள்ளவர்கள் தங்களிடம் உள்ள சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும். காட்வெயார் பொருட்கள் தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் வருகை தரவும்.

(C-2251)

குரு காட்வெயார்
No. 175, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.
077 743 5265


## மரண அறிவித்தல்

மலர்வு
1940 - 01 - 18



இறப்பு
2025 - 02 - 13

### Dr.இளையதம்பி செல்வநாயகம்
### (கருணா கிளினிக் – சங்கானை)

தெல்லிப்பளைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்வநாயகம் அவர்கள் நேற்று (13.02.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - தங்கமுத்து தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் சறோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும் அரியநாயகம் (ஆதுரா கிளினிக் - மட்டக்களப்பு), காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் (கலாஜோதி புத்தகசாலை), இராஜநாயகம் (துர்கா மரக்காலை - சண்டிலிப்பாய்) ஆகியோரின் சகோதரரும் திருவிளக்கம், திருப்பதிதேவி, துரைசிங்கம்; கணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் பாலமுரளி (கனடா), பாலகருணா (கருணா அழகுமாடம் - சங்கானை), பாலஜீவன் (வெஸ்ரன் பார்மசி - சங்கானை), கலைமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்மிளா (கனடா), விஜிதா (வலி.தெ.மேற்கு பிரதேச சபை), ராதிகா (காரைநகர் யாழ்ரன் கல்லூரி), பிரபாகரன் (வலயக்கல்வி அலுவலகம் - மருதனார்மடம்) ஆகியோரின் மாமனாரும் அருவிகா, கம்சிகா, அன்பழகன், அகரன், கஜேந்திகா, மதுரங்கா, பிரவீனா, சதுர்சிகா, டிசானன், தரணிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2025) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(842)

தகவல்: குடும்பத்தினர்
077 844 9377


## UK & CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

(C-2260)

Exponet Overseas consultant
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995
021 435 5113

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-2259)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## பணிப்பெண் தேவை

நெல்லியடியில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வீட்டு வேலை பணிப்பெண் தேவை.
Salary 30,000/= per month
மேலதிக தொடர்புகளுக்கு :
(843)
077 274 2223


## தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

எல்ல நானுஓயா ஓ.டி.சி. தொடருந்தில் ஒருவர் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை நானுஓயாவில் இருந்து பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த ஓ.டி.சி. தொடருந்தில் ஹாலிஎலைக்கும் பதுளைக்கும் இடைப்பட்ட பகுதியில் மேற்படி நபர் மோதி உயிரிழந்துள்ளார்.

40 வயது மதிக்கத்தக்க நபரே உயிரிழந்த நிலையில், சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## தேவை

- விற்பனையாளர்
- சிட்டை எழுதுனர்

உடன் தேவை. நேரில் வரவும் சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

(3418)

பேப்பர் கவுஸ்
No.300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## ஊரெழுவில் 8 பரப்பு காணி விற்பனைக்கு

- பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம்
- 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்.
- காணியின் இரண்டு பக்க பாதையும் தார் வீதி
- நல்ல சூழல்
- செம்மண்.

(3414)

077 617 2892


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org